## January 6, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழகம் முழுவதும் 10 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

(i) சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் எண்ம முன்னேற்றத்துக்காக 'உலகம் உங்கள் கையில்' எனும் 20 லட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் முதல் கட்டமாக 10 லட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தை முதல்வர் தொடங்கி வைத்தார்.

2. சீன வணிகர்களின் பயணத்தை எளிதாக்கும் நோக்கில், மின்னணு வணிக விசாவை இந்தியா அறிமுகம் செய்துள்ளது. இதுதொடர்பாக சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் உள்ள இந்திய தூதரகம் அண்மையில் வெளியிட்ட அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டதாவது:

(i) சீன வணிகர்கள் இந்தியாவுக்குப் பயணிக்க கடந்த ஜன.1- ஆம் தேதி மின்னணு வணிக விசாவை இந்தியா அறிமுகம் செய்துள்ளது. இந்த விசாவுக்கு இந்திய தூதரகத்துக்கு நேரில் வராமலும், முகவர்களை அணுகாமலும் இணையவழியில் விண்ணப்பிக்கலாம்.

(ii) வணிக நோக்கத்துக்காக இந்தியா வருவதற்கு விசா பெறுவதற்கான தேவை அதிகரித்துள்ளதால், இந்தப் புதிய விசா அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. சுமார் 45 முதல் 50 நாள்களில் இந்த விசா வழங்கப்படும். அத்துடன் 6 மாதங்கள் இந்தியாவில் தங்க அனுமதி அளிக்கப்படும்.

(iii) வணிக கருவிகளை நிறுவுதல், தரப் பரிசோதனை, அத்தியாவசிய பராமரிப்பு மற்றும் தயாரிப்பு, தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பை அதிகரித்தல் போன்ற குறிப்பிட்ட வணிக செயல்பாடுகளுக்கு https://indianvisaonline.gov.in, https://www.nsws.gov.in வலைதளங்கள் மூலம் இந்த விசாவுக்கு விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. ஒலியைப் போல் 5 மடங்குக்கும் மேலான வேகத்தில் பாயக்கூடிய ஹைப்பர்சோனிக் ஏவுகணையை வெற்றிகரமாக சோதித்துப் பார்த்ததாக வட கொரியா அறிவித்தது.

(i) இந்த ஏவுகணை அதிநவீன ஹைப்பர்சோனிக் ஆயுதம் கொண்டது. அதிபர் கிம் ஜாங்-உன் சோதனையை நேரில் பார்வையிட்டார். இது நாட்டின் பாதுகாப்புத் திறனை மேலும் வலுப்படுத்தியுள்ளது என்று அந்த செய்தி நிறுவனம் தெரிவித்தது.

(ii) ஹைப்பர்சோனிக் ஏவுகணை தொழில்நுட்பத்தில் வட கொரியா தொடர்ந்து முன்னேற்றம் காட்டி வருகிறது. இவை ராடார் கண்காணிப்பில் இருந்து தப்பக் கூடியவை என்று நிபுணர்கள் அச்சம் தெரிவிக்கும் சூழலில் வட கொரியா தற்போது நடத்தியுள்ள இந்த சோதனையை அமெரிக்காவும், தென் கொரியாவும் கண்டித்துள்ளன.

4. ஈரானில் பொருளாதார நெருக்கடி காரணமாக நடைபெறும் தீவிர போராட்டம்

ஏழாவது நாளில் அடியெடுத்து வைத்துள்ளது.

(i) ஈரானின் நாணயமான ரியால் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சி அடைந்துள்ளது. 1 அமெரிக்க டாலர் தற்போது 14 லட்சம்ரியால் வரை விலை போகிறது.

(ii) அரசு பணவீக்கம், நாணய மதிப்பு வீழ்ச்சி, விலைவாசி உயர்வு போன்றவற்றுக்கு பொறுப்பேற்க வேண்டும் எனவும், கமேனி தலையிலான ஆட்சி அகற்றப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி நாடு முழுவதும் கடந்த மாத இறுதியில் தொடங்கிய போராட்டங்கள் தற்போது 7-ஆவது நாளை அடைந்துள்ளது.

5. பில்லியர்ட்ஸ் முன்னாள் உலக சாம்பியன் மனோஜ் கோத்தாரி (67) திருநெல்வேலியில் காலமானார்.

(i) மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவை சேர்ந்த மனோஜ் கோத்தாரி, பில்லியர்ட்ஸ் விளையாட் டில் 1990-இல் உலக சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். பில்லியர்ட்ஸ் விளையாட்டுக்கான இந்திய அணியின் நடப்பு தலைமைப் பயிற்சியாளராக இருக்கும் இவருக்கு, மத்திய அரசு 2005-ஆம் ஆண்டு தியான்சந்த் விருது வழங்கி கௌரவித்தது. இவர் அர்ஜுனா விருதும் பெற்றுள்ளார்.

6. கேலோ இந்தியாவின் 2- ஆம் ஆண்டு கடற்கரை விளையாட்டுப் போட்டிகள் பீச் கேம்வியடையு நகரில் தொடங்கின. கோக் கடற்கரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஜம்மு & காஷ்மீர் யூனியன் பிரதேச துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா கலந்துகொண்டு போட்டிகள் அதிகாரபூர்வமாக தொடங்கியதாக அறிவித்தார்.

(i) முன்னதாக, வீரர், வீராங்கனை களான டான் ரெமெடியோஸ் (பீச் கால்பந்து), பாயல் பார்மர் (பீச் வாலிபால்), அஜீஷ் படேல், ஜல்பா சோலங்கி (டக் ஆஃப் வார்) ஆகியோர் பங்கேற்ற ஜோதி ஓட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. ஜோதியை அவர்கள், துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, தாத்ரா & நாகர் ஹவேலி மற்றும் டாமன் & டையு யூனியன் பிரதேச நிர்வாகி பிரஃபுல் படேல் ஆகியோரிடம் ஒப்படைத்தனர்.

7. இந்தியா-பூடான் உச்சநீதிமன்றங்களுக்கு இடையே இளம் சட்டப் பணியாளர்களைப் பரிமாறிக்கொள்ளும் ஒப்பந்தத்தின் கீழ், உச்சநீதிமன் றத்தில் 2 பூடான் சட்ட உதவியாளர்கள் பணியாற்ற உள்ளனர்.

(i) உச்சநீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகளின் தொடக்கத்தின்போது அவர்கள் இருவரையும் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த் வரவேற்றார். அப்போது அவர் கூறுகையில், 'உச்சநீதிமன்றத்தில் பூடான் சட்ட உதவியாளர்கள் இருவர் 3 மாதங்கள் பணியாற்றுவர். அவர்களுக்கு உச்சநீ திமன்றத்தின் பிற சட்ட உதவியாளர்களுக்கு நிகரான ஊதியம் வழங்கப்படும். அவர்களின் பயணச் செலவையும் உச்சநீதிமன்றம் ஏற்கும்.

(ii) இந்தியா-பூடான் நீதித் துறைக்கு இடையிலானஒத் துழைப்பு மற்றும் உறவை வலுப்படுத்தி மேம்படுத்தும் நோக்கில் இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது' என்று தெரிவித்தார்.

8. இந்தியாவில் வடிவமைத்து உருவாக்கப்பட்ட இத்திய கடலோரக் காவல் படையின் (ஐசிஜி) 'சமுத்திர பிரதாப் என்ற மாசுக் கட்டுப்பாட்டுக் கப்பலை பாதுகாப்புத் துறை

அமைச்சர் ராஜ்நாத் சிங் நாட்டுக்காக அர்ப்பணித்தார்.

(i) 60 சதவிதத்துக்கும் அதிகமான உள்நாட்டுப் பாகங்களைக் கொண்டு கட்டப்பட்ட இந்த 114.5 மீட்டர் நீளமுள்ள கப்பல், 4,200 டன் எடை கொண்டது. இது 22 கடல் மைல் வேகத்தில் செல்லக்கூடியது.

(ii) மேலும் 6,000 கடல் மைல் வரை தொடர்ந்து பயணிக்கும் திறன் கொண்டது.

(iii) கோவா ஷிப்யார்ட் லிமிடெட்' நிறுவனத்தால் டிசம்பர் மாதம் ஒப்படைக்கப்பட்ட இந்தக் கப்பல், ஐசிஜியின் மிகப்பெரிய மற்றும் மேம்படுத்தப்பட்ட மாசுக் கட்டுப்பாட்டுக் கப்பலாகக் கருதப்படுகிறது.

(iv) இது கடல்சார் மாசுக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை அமல்படுத்துதல், கடல்சார் சட்ட அமலாக்கம், தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள், மற்றும் இந்தியாவின் பிரத்யேகப் பொருளாதார மண்டலத்தைப் பாதுகாக்கும் பணியை மேற்கொள்ளும்.